2003 ஜனவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

பார்வையாளர்கள் அறைக்குக் கூடுதல் வசதி

***23267—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் பார்வையாளர்கள் காத்திருக்க இருக்கைகள் கொண்ட தனி இடம், கழிப்பிட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை மத்திய சிறைச்சாலையில் விசாரணைக் கைதிகள் மற்றும் தண்டனைக் கைதிகளைப் பார்ப்பதற்காக பார்வையாளர்கள் தினசரி நூற்றுக்கணக்கான பேர் வந்து, பார்வையிடுகிறார்கள். தினசரி அங்கே பல மணி நேரம் காத்துக்கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலும், அவர்கள் நிழலுக்கு ஒதுங்கக்கூட இடவசதி இல்லாத காரணத்தாலும், பல நேரங்களில், காலையிலே வந்தவர்கள் மாலை வரை காத்திருக்கின்ற காரணத்தாலும், கழிப்பிட வசதி இல்லையென்ற காரணத்தாலும், அவற்றை இந்த அரசு கட்டித் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2003 ஜனவரி 28

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறை விதிகள் தொகுப்பு 2, விதி 527-ன் படி ஒரு சிறைவாசியை மூன்று பார்வையாளர்கள் ஒரே நேரத்தில் நேர்காணல் செய்யலாம். பாளையங்கோட்டை மத்திய சிறையில் சிறைவாசிகளை நேர்காணல் செய்ய தினமும் சராசரியாக ஐம்பதுக்கும் அதிகமான பார்வையாளர்கள் சிறைக்கு வந்து செல்வதால், அவர்கள் தங்கி இளைப்பாற கழிவறை வசதிகளுடன்கூடிய பார்வையாளர்கள் அறை அமைப்பதற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து ரூ.8.40 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருந்தபோது, கழிவறை வசதிகளுடன்கூடிய மேற்படி பார்வையாளர்கள் அறையை ரூ.5 இலட்சத்து 47 ஆயிரம் செலவில் கட்டித் தர திருநெல்வேலி இருத்துவப் பேராயர் தானே முன்வந்து அனுமதி கோரியதால், அவருக்கு, பாளையங்கோட்டை மத்திய சிறை வளாகத்திற்குள் சிறைவாசிகளைப் பார்க்க வரும் பார்வையாளர்களுக்கு ரூ.5.47 இலட்சம் செலவில் கழிவறை வசதிகளுடைய ஓய்வு அறையைக் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்க ஆணையிட்டுள்ளது.

பாளையங்கோட்டை மத்திய சிறை வளாகத்திற்குள் உள்ள சிறைவாசிகளைப் பார்க்க வரும் பார்வையாளர்களுக்காகக் கட்டப்படும் கழிவறையுடன்கூடிய ஓய்வு அறையைக் கட்டித் தருவது தொடர்பாக எந்தவிதமான விளம்பரமும் சிறைத் துறை நிர்வாகத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் செய்யக்கூடாது என்றும், திருநெல்வேலி தென்னிந்திய இருத்துவப் பேராயர், கட்டடம் தன்னால் கட்டப்பட்டது என்பதற்காக அவை மீது எவ்வித உரிமையும் கோரக்கூடாது என்பதோடல்லாமல், எந்தவிதமான மதச் சின்னங்களோ, பிரச்சாரங்களோ பொறிக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுடன் அரசு அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-05

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்குவதற்கான இடம், மாண்புமிகு அமைச்சர் சொன்னது போல ஒரு பார்வையாளர் அறை அமைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் தண்ணீர் வசதிகளுடன்கூடிய கழிப்பறை கட்டுவதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு

2003 ஜனவரி 28]

வருகிறேன். அதேநேரத்தில் பாளையங்கோட்டை சிறைச்சாலையில் பெரும்பாலும் பல மணி நேரம் காத்திருக்கக்கூடிய சூழ்நிலை உள்ளதால் அங்கே இருக்கின்ற நிருவாகம் உடனடியாக பார்வையிடுவதற்காக வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே சொன்னதுபோல பாளையங்கோட்டையில் மத்திய சிறைச்சாலை மிகப் பெரியதாக இருந்தாலும்கூட அங்கே மகளிருக்கென தனியாக சிறைச்சாலை இல்லை; அதை இந்த அரசு கவனிக்குமா? பரிசீலனை செய்யுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் கிருத்துவப் பேராயர் அமைப்புக்கு 7-1-2003 அன்று ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நடவடிக்கை மேற்கொள்வதற்கும் துரிதப்படுத்துவதற்கும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள். அங்கு அதிகப்படியான அடிப்படை வசதிகள் பார்வையாளர்களுக்குத் தேவையிருப்பின் அரசு ஆய்வு செய்யும் என்றும், மகளிருக்குத் தனி சிறைச்சாலை அமைக்கப்படுமா என்ற மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு, அரசு ஆய்வு செய்யும் என்றும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

3—

சட்டக் கல்லூரி

***18719—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,